10.03.2026.

OS. 190/2022

PW1- மாரி – த/பெ. வேலாயுதம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.03.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> (1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அனுபவத்தை தடை செய்து நான் வீடு கட்டுவதை தடுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

2. வழக்கு சொத்து எவ்வாறு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு பூர்விக சொத்து ஆகும்.

3. பூர்விக சொத்தை காட்டக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல என் அம்மா பெயரில் உள்ள பத்திரத்தை கொடுத்துள்ளேன். நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் என் தாயார் பெயரில் எந்த ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னை சேர்த்து மொத்தம் 6 பேர் உள்ளனர்.

5. நான் என் தாயாருக்கு எத்தனையாவது மகன் என்றால் 4 வது மகன்.

6. எனக்கும், என் சகோதரர்களுக்கும் ஏற்பட்ட பாக அட்டவணையில் எத்தனையாவது சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் 1ம் அயிட்ட

சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது.

7. பாக அட்டவணை சொத்து எந்த திசையில் பிரிக்கப்பட்டது என்றால் கிழமேலாக பாகம் பிரிக்கப்பட்டது.

8. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தச்சுவேலை செய்கிறேன்.

9. நான் வீடு கட்டுவதற்கு மத்திய அரசு உதவி திட்டத்தின் கீழ் நிதி பெற்றேன் என்றால் சரிதான்.

10. எவ்வளவு இடத்திற்கு வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டது என்றால் 2 சென்ட் இடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

11. நான் பழைய வீட்டை இடித்து புதிய வீடு கட்டுகிறேன்என்றால் சரிதான்.

12. என் பழைய வீடு இருந்த இடத்திற்கும் 1ம் பிரதிவாதி வீட்டிற்கு இடையே காலி இடம் இருந்தது என்றால் சரிதான் அந்த காலி இடமானது என் ஓட்டு சாய்வு இறங்கிய இடமாகும்.

13. பிராதில் எந்த பக்கமும் ஓட்டு சாய்வு இருந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

14. நான் வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி வரைபடம்

வாங்கவில்லை என்றால் சரிதான்.

15. என் வீடு 2.1/2 சென்ட் இடத்தில் இருப்பதாக நான் கட்சி செய்யும் நிலையில் பிராது தபசில் விவரத்தில் எவ்வளவு சென்ட் உள்ளது என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

16. எவ்வளவு இடத்திற்காக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 அடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

17. என் வீட்டிற்கு வடக்கே 1ம் பிரதிவாதிக்கு காலி மனை உள்ளது என்றால் காலி இடம் உள்ளது. அது யாருக்கு என்று அளந்து பார்த்தால் தான் தெரியும்.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி